## வடமத்திய மாகாண சபை

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக, கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட வடமத்திய மாகாண சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை என்னால் வெளியிட முடியாதுள்ளது.

### 1.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள்**

மீளாய்வாண்டிற்குரிய மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டன.

**(ஆ) ஏனைய கணக்குகள்**

மீளாய்வாண்டின் பொருட்டு 2012 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு மாகாண சபையின் ஏனைய கணக்குகளைச் சமர்ப்பித்தல் தொடர்பான முன்னேற்றம் கீழே தரப்படுகின்றது.

| | | 2011 ஆம் ஆண்டிற்கானது | | | முன்னைய ஆண்டுகளுக்கானது |
|---|---|---|---|---|---|
| | | கணக்குகளின் மொத்த எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப்படாத கணக்குகளின் எண்ணிக்கை | சமர்ப்பிக்கப் படாத கணக்குகளின் எண்ணிக்கை |
| (i) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் | 29 | 29 | - | - |
| (ii) | வருமானக் கணக்குகள் | 21 | 21 | - | - |
| (iii) | மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் | 57 | 45 | 12 | 01 |
| (iv) | வணிக முற்பணக் கணக்குகள் | 05 | 05 | - | - |
| (v) | நிதியக் கணக்குகள் | 03 | 02 | 01 | - |
| (vi) | நியதிச்சட்ட கணக்குகள் | 05 | 04 | 01 | - |
| (vii) | சுய தொழில் வாய்ப்புக் கடன் முற்பணக் கணக்குகள் | 01 | - | 01 | - |
| | மொத்தம் | 121 | 106 | 15 | 01 |

### 1.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

மாகாண சபை நிதியத்தின் சகல வருமானமும் செலவினமும் காசு அடிப்படையில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும் மாகாண சபையின் பல்வேறு

நிறுவனங்களிற்குரிய 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 60,959,437 தொகையான பொறுப்புக்கள் நடைமுறைப் பொறுப்பாகவும் மாகாண சபையின் ஆரம்பத்திலிருந்து மீளாய்வாண்டு இறுதி வரையும் மாகாண சபை நிதியத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட சகல சொத்துக்கள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் பெறுமதிகள் சொத்தாகவும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட அவசர நிலைமை நிதியத்தினால் உழைக்கப்பட்ட வட்டி வருமானத்தில் ரூபா 1,192,257 தொகை மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் வருமானமாகக் காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அப்பெறுமானத்தினால் மாகாண சபையின் வருமானம் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) வடமத்திய மாகாண சபையினால் ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட நியதிச்சட்டத்தின் மூலம் வெளிப்படுத்தப்படாத 03 நிதியங்களின் ரூபா 8,717,336 கூட்டுப்பெறுமதியானது நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படாதிருந்ததுடன் அப்பணம் அந்நிதியத்தை உருவாக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்தப்படாமல் மாகாண சபையினால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட நியமங்களின் பிரகாரம் வெளிப்படுத்தப்படாத விவசாய அமைச்சின் கீழுள்ள விவசாய உற்பத்தி விற்பனைச் சுழற்சி நிதியத்திலுள்ள ரூபா 6,886,444 தொகையான மீதி நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆம் ஆண்டின்போது ரணவிறு சேவை நிதியத்தின் பணம், வைப்புக் கணக்கின் முதலீட்டில் உழைக்கப்பட்ட ரூபா 25,553 தொகையான வட்டி வருமானம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 19,312,529 தொகையான மாகாண கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் மாகாண சபை உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கின் வரவு மீதி பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 19,862,332 ஆனமையால் ரூபா 549,803 தொகை இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு ஆக இருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் ரூபா 794,755,053 தொகயான வைப்பு மீதி பொது வைப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் (விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்புப் பண மாற்றீடு தவிர) ரூபா 555,629,159 ஆனமையால் இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடு ரூபா 239,125,894 ஆக இருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மாகாண சபை நிறுவனங்களிலிருந்து அறவிடப்பட்டு விதவைகள், அனாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்படாமல் நிறுத்திவைக்கப்பட்ட ரூபா 23,497,250 தொகையான பங்களிப்புப்பணம் பொது வைப்புக் கட்டுப்பாட்டுக் கணக்கின் பிரகாரம் ரூபா 239,605,146 ஆனமையால் ரூபா 216,107,896 தொகை இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடாக இருந்தது.

### 1.2.5 வங்கிக் கணக்கு செயற்பாடுகளில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**வங்கிக் கணக்கிணக்கம்**

(அ) அமைச்சு மற்றும் 05 திணைக்களங்களுக்குரிய 06 வங்கிக் கணக்குகளில் 06 மாதங்களை விஞ்சிய தேறாதிருந்த ரூபா 49,059,808 தொகையான வைப்புக்கள் தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சு மற்றும் 05 திணைக்களங்களுக்குரிய 07 வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்டு 06 மாதங்களைக் கடந்திருந்தும் கொடுப்பனவிற்காக வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 2,200,217 தொகையான காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396(டீ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 07 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 7,254,340 தொகையான இனங்காணப்படாத வரவு மற்றும் 07 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 4,590,145 தொகையான இனங்காணப்படாத செலவு தொடர்பான பெறுவனவுகளும் செவினங்களும் இனங்காணப்பட்டு கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.2.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

அபிவிருத்தி, வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மைக்கு 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் நபர்களிடமிருந்தும் அறவிடவேண்டியிருந்த ரூபா 5,550,007 தொகையை அறவிடுவதற்கும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பல்வேறு நிறுவனங்களுக்கும் நபர்களுக்கும் செலுத்த வேண்யிருந்த ரூபா 3,115,517 தொகையை தீர்த்து வைப்பதற்கும் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.7 கட்டுநிதிக் கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 சனவரி 23 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத ரூபா 306,070,953 தொகையான கட்டுநிதி வரவு மீதியாக இருந்ததுடன் அதில் 69 சதவீதத்தை விஞ்சிய ரூபா 212,226,803 தொகையான மீதி மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தீர்க்கப்படவேண்டியிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோராகக் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 8,280,079 கூட்டுத்தொகையான 05 மீதிகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளூராட்சித்

திணைக்களங்களினால் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. பல வருட காலமாக கொண்டுவரப்படுகின்ற அந்த மீதிகளின் சரியான தன்மையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.8 பொது வைப்புக் கணக்கு

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கின் மீதி ரூபா 818,252,303 ஆக இருந்ததுடன் தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்ட 06 நிறுவனங்களில் ரூபா 65,940,473 தொகையான காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.9 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 24 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2013 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் பராமரிக்கப்படாமை

2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(02) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஒட்டு மொத்த மாகாண சபை தொடர்பாகவும் மாகாண சபையின் ஒவ்வொரு நிறுவனங்கள் தொடர்பாகவும் நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**(இ) தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

முறையான கொள்வனவுக் குழு அறிக்கை, பகிர்ந்தளித்தல் பதிவேடு, வேலைப்பூர்த்தி அறிக்கை, நியமனக் கடிதம் மற்றும் வரவுச் சான்றிதழ் போன்ற தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது ரூபா 3,979,502 கூட்டுத்தொகையான கொடுப்பனவுகள் மற்றும் பல்வேறு நபர்களிடமிருந்தும் பெறப்பட்டு காப்பகத்தில் வைக்கப்பட்ட 09 காசோலைகளின் ரூபா 19,248,339 கூட்டுத்தொகையான பெறுவனவுகள் என்பவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

### 1.2.10 இணங்காமை

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) **அதிகாரச்சட்டம்** | |
| (i) 1979 இன் 07 ஆம் இலக்க அரசாங்க காணி உரித்தினை மீளப் பெறுதல் அதிகாரச்சட்டம் | காலதிவுல்வெவ ஆயுர் வேத வைத்தியசாலையின் உத்தியோகபூர்வ விடுதியில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாழ்ந்து வரும் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் 2009 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புப் பணமான ரூபா 1,687,616 தொகை |

| | | |
|---|---|---|
| | | செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அதிகாரச் சட்டத்தின் 16 ஆம் பிரிவு | அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 473,614 தொகையான பங்களிப்புப் பணம் செலுத்துதல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 2002 திசெம்பர் 09 ஆந் திகதிய என்சீபீ/2002/11 ஆம் இலக்க மாகாணத் திறைசேரிச் சுற்றுநிருபம் மற்றும் 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி | 1991 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை இடம் மாற்றலாகிச் சென்ற 405 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 6,835,012 தொகையான கடன் மீதி மற்றும் இடமாற்றம் பெற்று வந்த 35 உத்தியோகத்தர்களுக்குரிய ரூபா 1,020,389 தொகையான கடன் மீதி என்பன மாதாந்த கணக்குப் பொழிப்பின் ஊடாக அல்லது காசு செலுத்துதல் அல்லது தவணைப்பணம் மற்றும் வட்டி அனுப்புதலின் மூலமோ தீர்த்து வைப்பதற்கு திம்புலாகல வலயக் கல்வி அலுவலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப் பிரமாணம் 371 | 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரையான காலத்தில் அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் பல்வேறு செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 4,464,250 தொகையான முற்பணம் மீளாய்வாண்டின் போதும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான மாகாண சபை நிதியத்தின் மிகை ரூபா 1,583,081,989 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 414,139,132 ஆக இருந்தது.

## 2.2 வருமானமும் செலவினமும்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பு கீழே காட்டப்பட்டுள்ளது.

**வருமானம்**

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| மாகாண சபை விடயங்களுக்குரிய வருமானம் | பாதீடு செய்யப்பட்டவை<br>ரூபா. ஆயிரங்களில் | உள்ளபடியானது<br>ரூபா. ஆயிரங்களில் | முரண்<br>ரூபா. ஆயிரங்களில் | பாதீடு செய்யப்பட்டவை<br>ரூபா. ஆயிரங்களில் | உள்ளபடியானது<br>ரூபா. ஆயிரங்களில் | முரண்<br>ரூபா. ஆயிரங்களில் |
| வரி வருமானம் | 1,508,466 | 1,621,262 | (112,796) | 1,063,850 | 836,171 | (227,679) |
| வரி அல்லாத வருமானம் | 231,333 | 351,610 | (120,277) | 312,350 | 332,571 | 20,221 |
| அரசாங்க மானியம் | 10,469,250 | 10,313,423 | 155,827 | 10,717,660 | 10,676,670 | (40,990) |
| மொத்தம் | 12,209,049 | 12,286,295 | (77,246) | 12,093,860 | 11,845,412 | 248,448 |

## செலவினம்

| | 2011 | | | 2010 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் | பாதீடு செய்யப்பட்டவை | உள்ளபடியானது | முரண் |
| | ரூபா. ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் |
| **மீண்டுவருஞ் செலவினம்** | | | | | | |
| ஆளுக்குரிய வேதனம் | 6,553,681 | 6,576,552 | (22,871) | 6,830,734 | 6,379,727 | 451,007 |
| ஏனைய செலவினம் | 1,727,563 | 1,620,050 | 107,513 | 1,809,077 | 1,556,948 | 252,129 |
| உப மொத்தம் | 8,281,244 | 8,196,602 | 84,642 | 8,639,811 | 7,936,675 | 703,136 |
| மூலதனச் செலவினம் | 3,443,630 | 2,506,611 | 937,019 | 3,798,048 | 3,494,801 | 303,247 |
| மொத்தம் | 11,724,874 | 10,703,213 | 1,021,661 | 12,437,859 | 11,431,476 | 1,006,383 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ரூபா 10,703,213,413 தொகையான மொத்தச் செலவினத்தில் 77 சதவீதம் மீண்டுவருஞ் செலவினமாக இருந்ததுடன் 23 சதவீதம் மூலதனச் செலவினமாகக் காணப்பட்டது. முன்னைய ஆண்டின் ரூபா 11,431,475,621 தொகையான மொத்தச் செலவினத்தில் 69 சதவீதம் மீண்டுவருஞ் செலவினமாக இருந்ததுடன் 31 சதவீதம் மூலதனச் செலவினமாகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக மீளாய்வாண்டின் போது மாகாண சபையின் மூலதனச் செலவினம் 8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்தை விஞ்சி மீளாய்வாண்டின் மீண்டுவருஞ் செலவினம் 8 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் அந்த அதிகரிப்பிற்கு மீளாய்வாண்டின் மூலதனச் செலவினம் முன்னைய ஆண்டின் மூலதனச் செலவினத்தை விட குறைவடைந்தமை தாக்கமளித்திருந்தன.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அரசாங்க மானியம் ரூபா 10,313,423,130 உடன் மாகாணசபையின் பெறுவனவான ரூபா 1,927,872,272 யினையும் ஈடுபடுத்தி மீளாய்வாண்டின் போது ரூபா 10,703,213,413 தொகை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், மாகாணசபை வருமானத்திலிருந்தும் மத்திய அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஒவ்வொரு மானியத்திலிருந்தும் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செலவினங்களை வெவ்வேறாக இனங்காணக்கூடியவாறாக கணக்கீட்டு நடைமுறை மாகாண சபையினால் பேணப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக மீளாய்வாண்டில் ரூபா 1,583,081,989 தொகையான மிகைக்கு திறைசேரி மானியங்களிலிருந்தான சேமிப்புக்களா, மாகாண சபை வருமானங்களிலிருந்தான சேமிப்புக்களா தாக்கமளித்திருந்தன என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் இறுதியிலுள்ள நிலுவை வருமானம் தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றது.

| **வருமானத் தலைப்பு** | **2011** | **2010** | **2009** |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| சொத்துக் கைமாற்றலுக்கான முத்திரைக் கட்டணம் | - | - | 256,020 |
| வியாபாரப் புரள்வு வரி | 29,766,884 | 18,877,787 | 43,914,744 |
| மோட்டார் வாகன வருமான அனுமதிப்பத்திரம் | 2,238,236 | 5,769,545 | 4,994,613 |
| | 32,005,120 | 24,647,331 | 49,165,377 |

(ஆ) மீளாய்வாண்டிற்கான காணி மற்றும் ஏனைய அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் மோட்டார் வாகன அனுமதிப்பத்திரக் கட்டணம் என்பன முறையே ரூபா 38,000,000 எனவும் ரூபா 210,000,000 எனவும் வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. உள்ளவாறான வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விஞ்சியிருந்ததுடன் அது முறையே ரூபா 67,433,880 ஆகவும் ரூபா 284,388,661 ஆகவும் இருந்தன. வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நி.பி 85(1)(இ) இன் பிரகாரம் முடியுமானவரை உள்ளபடியாகவும் சரியாகவும் தமது மதிப்பீட்டைத் தயாரிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது.

## 2.4 முற்பணக் கணக்குகளின் எல்லைகளைக் கடைப்பிடிக்காமை

இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 503 மற்றும் வடமத்திய மாகாண சபையின் நிதி விதிக் கோவையின் விதி 369 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையினால் முற்பணக் கணக்கின் ஒரு விடயத்தில் செலவினத்தின் ஆகக் கூடிய வரவு எல்லை ரூபா 261,364 இனால் அதிகரித்திருந்ததுடன் 03 விடயங்களில் ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 3,259,424 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது.

## 2.5 மனிதவள முகாமைத்தவம்

### 2.5.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர்

2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் வடமத்திய மாகாணத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் சம்பந்தமான தகவல்கள் பின்வருமாறு.

**(அ) மாகாண சபை அமைச்சு, திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்கள்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிட ங்களின் எண்ணி க்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட தரம் | 689 | 468 | 221 | - |
| (ii) | மூன்றாம் தரம் | 1528 | 1518 | 10 | - |
| (iii) | இரண்டாம் தரம் | 2219 | 1411 | 808 | - |
| (iv) | ஆரம்ப தரம் | 2465 | 2012 | 453 | - |
| (v) | ஏனைய (அமையம்/தற்காலிகம்) | 11 | 441 | - | 430 |
| | | 6912 | 5850 | 1492 | 430 |

**(ஆ) பாடசாலைப் பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப் பட்டது | உள்ளபடி யானது | வெற்றிடங்க ளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 942 | 458 | 484 |
| (ii) | ஆசிரியர்கள் | 13629 | 12924 | 705 |
| (iii) | ஆசிரிய உதவியாளர்கள் | 1490 | 1407 | 83 |
| (iv) | திட்டமிடல் / அபிவிருத்தி / நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் / | 838 | 28 | 810 |

| | | | | |
|---|---|---|---|---|
| | முகாமைத்துவ உதவியாளர்கள் | | | |
| (v) | நூலகர்கள் | 12 | 5 | 7 |
| (vi) | சிற்றூழியர்கள் | 742 | 104 | 638 |
| | | -------- | -------- | -------- |
| | | 17653 | 14926 | 2727 |
| | | -------- | -------- | -------- |
| | முழு மொத்தம் | 24565 | 20799 | 3766 |
| | | ===== | ===== | ===== |

(இ) மீளாய்வாண்டின் போது வட மத்திய மாகாண சபையினால் மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளாக ரூபா 348,877,542 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அதில் 81 சதவீதமான ரூபா 286,071,212 தொகை மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பதவியணியினருக்குரிய மேலதிக நேரக் கொடுப்பனவாகவும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளாகவும் செலுத்தப்பட்டிருந்தன. அந்த திணைக்களத்தின் சகல தரங்களிலும் வெற்றிடங்களின் எண்ணிக்கை 238 ஆக இருந்ததுடன் ஒரு வெற்றிடத்திற்கான மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவாக ரூபா 100,164 போன்ற கூடிய கிரயத்தைக் கொண்டிருந்தன. அத் திணைக்களத்தின் 3298 எண்ணிக்கையிலான உள்ளவாறான பதவியணிகளில் மாதாந்தம் ஒரு நபருக்கான மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகளின் கிரயம் ரூபா 7,228 ஆக இருந்தது.

### 2.5.2 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய மனித வளங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரதம அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தகவல் பிரிவிற்காக 1989 பெப்ரவரி 08 ஆந் திகதி தொடக்கம் 04 உத்தியோகத்தர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் அந்த பதவிகள் நி.பி 71 இன் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிராததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு வேறு செயற் பொறுப்புக்கள் கையளிக்கப்படாமல் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 9,432,880 தொகையான சம்பளம் மற்றும் வேதனங்கள் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.1.1 மற்றும் 13.3 ஆம் பிரிவுகள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயல்

நடைமுறை விதி இல. 118 என்பவற்றிற்கு கவனம் செலுத்தப்படாமல் 2000 சனவரி 07 ஆம் திகதிய 2000/4 ஆம் இலக்க உயர் கல்வி அமைச்சின் சுற்றுநிருபத்திற்கும் அதிபர் சேவை பிரமாணக் குறிப்புக்களுக்கும் முரணாக ஹிங்குரக் கொடை கல்வி வலயத்தில் 48 பதில் அதிபர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

**2.5.3 ஏனைய நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வடமத்திய மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களின் பதவியணியினர்களுக்குரிய 04 உத்தியோகத்தர்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக மத்திய அரசின் நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அந்த உத்தியோத்தர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் பதவியணியினருக்குரிய நிறுவனங்களினால் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) பொலன்னறுவை கல்வி வலயத்தில் சேவையாற்றிய 09 ஆசிரிய ஆலோசகர்கள் அமைச்சர் / உறுப்பினர்களின் பதவியணியினர்களிலும் இலங்கை இராணுவ சேவையிலும் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தர்களுக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 2,976,584 தொகை சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2013 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணம் மாகாண சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) ஹிங்குரக்கொடை கல்வி வலயத்தில் அதிபர் சேவையில் 90 பதவிகளும் ஆசிரியர் சேவையின் 229 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்ட போதும் தேசிய பாடசாலை, மத்திய அரசின் ஆசிரியர் பயிற்சி நிலையம், வலயக் கல்வி அலுவலகம், தேசிய மாணவ படையணி மற்றும் கல்வி வலயத்திலுள்ள வசதி கூடிய பாடசாலைகளுக்கு முறையற்ற வகையிலும் சேவை நிபந்தனைக்கு முரணாகவும் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்த 29 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) கெபித்திகொல்லாவ, தம்புத்தேகம மற்றும் கலன்பிந்துனுவெவ கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் சேவையாற்றிக் கொண்டிருக்கின்ற 08 ஆசிரியர்கள் அமைச்சரின் பிரத்தியேக ஆளணிக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அவர்களுக்கான சம்பளம் மற்றும் படிகளாகச் செலுத்தப்பட்ட ரூபா 7,981,872 தொகை மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.6.1 செயற்பாடற்ற மற்றும் குறைவான பயன்பாடுடைய பௌதீக வளங்கள்

(அ) கீழே வகைப்படுத்தப்பட்டதன் பிரகாரம் சில பௌதீக வளங்கள், செயற்பாடற்று அல்லது குறைவான பயன்பாட்டுடன் காணப்படுகின்றமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | **சொத்துக்களின் வகை** | **எண்ணிக்கை / வகைகளின் அளவு** | **பெறுமதி** |
|---|---|---|---|
| | | | **ரூபா** |
| (i) | கட்டிடம் | 02 | மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை |
| (ii) | வாகனம் | 21 | - மேற்படி - |
| (iii) | இயந்திர உபகரணம் | 55 | - மேற்படி - |
| (iv) | அலுவலக உபகரணம் | 36 | - மேற்படி - |
| (v) | ஏனையவை | 02 | - மேற்படி - |
| | | 116 | |

(ஆ) 2000 ஆம் ஆண்டின் போது அரைவாசி பூர்த்தி செய்யப்பட்ட கல்அமுன மஹா வித்தியாலயத்தின் இரண்டு மாடிக் கட்டிடம் 2011 திசெம்பர் 31 வரையிலும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாமையினால் அதன் கீழ்மாடியையும் பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் செயற்பாடற்றுக் காணப்பட்டது.

### 2.6.2 வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப் / மெய்மையாய்வுச் சபை / 01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்குரிய பொருள் மெய்மையாய்வு 2012 மார்ச் 15 ஆந் திகதிக்கு முன் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மாகாண சபையின் அமைச்சு மற்றும் 04 திணைக்களங்களினால் 2013 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் அந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.6.3 அறவிட வேண்டிய ஊழியர் கடன்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 732,673,032 ஆக இருந்தது. 24 நிறுவனங்களில் 01 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக கொண்டுவரப்படுகின்ற நிலுவைக் கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 92,301,921 ஆக இருந்தமை தெரிவுப் பரிசோதனைகளின் போது வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மாகாண அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கின் ஹிங்குரக்கொடை வலயக் கல்வி அலுவலகத்தின் தகவல்களின் பிரகாரம் அலுவலகத்திற்கு வெளியே இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகததர்களிடமிருந்து 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா 3,434,994 ஆக இருந்ததுடன் அந்தக் கடன் மீதிகள் 01 வருடத்திற்கும் 15 வருடத்திற்கும் இடையிலான காலமாக நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.7 வாகனப் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2008 யூன் 26 அந் திகதிய 13/2008 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிருபம் மற்றும் 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய 13/2008 (iv) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றுநிரூபம் என்பவற்றின் பிரகாரம் உத்தியோக பூர்வ வாகனத்திற்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் குழாம் வாகனத்தை பயன்படுத்தலாகாத போதிலும் மாகாண சபைச் செயலகத்தின் செயலாளருக்கு வழங்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனத்திற்கு 2011 ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரையான காலத்திற்காக பெறப்பட்ட ரூபா 167,850 தொகையான எரிபொருள் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக அவரால் பயன்படுத்தப்பட்ட இரண்டு குழாம் வாகனங்களுக்காகவும் 2011 ஏப்ரல் தொடக்கம் திசெம்பர் வரையான காலத்தின் போது 22 கட்டளைகளினால் ரூபா 80,191 தொகையான 1051 லீற்றர் எரிபொருள் பெறப்பட்டிருந்தமை ஒட்ட அட்டவணைகளின் பிரகாரம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மாகாண சபையின் 02 அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை உள்ளடக்கிய 04 நிறுவனங்களினால் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்ட 18 வாகனங்களின் ஒட்டமானி செயற்பாடின்றிக் காணப்பட்டன.

## 2.8 போலியான / முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண விவசாய அமைச்சு விளைச்சல் திறன் கூடிய 3000 நெல் பக்கற்றுக்கள் பேராதனை விவசாயத் திணைக்களத்தின் நெல் மற்றும் நாற்றுப் பொருள் நிலையத்திலிருந்து ரூபா 75,000 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த நெல்லைக் கட்டளையிடுவதற்கு முன் அந்தத் துறையில் அனுபவமுள்ள உத்தியோத்தரிடமிருந்து மாதிரிகள் பெறப்படாமை மற்றும் கட்டளைகளில் உள்ளடக்கப்பட்ட நெல் வகை தொடர்பாக தெரிவுகளைப் பெற்றுக் கொள்ளாமை போன்ற காரணங்களினால் நலனாளிகளால் அந்த நெல் நிராகரிக்கப்பட்டமையால் தேவையான நெல்லை மீளவும் கொள்வனவு செய்ய வேண்டி ஏற்பட்டது. அந்த நெல் கொள்வனவு நடைமுறைகளுக்குப் புறம்பாக தனியார் வழங்குனரிடமிருந்து ரூபா 210,000 தொகையில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 3,592 மில்லியன் தொகையில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வெள்ளத்தினால் பாதிப்பிற்கு உள்ளாகிய 53 வீதிகளின் 175.73 கி. மீற்றரை புனரமைப்பதற்காக திறந்த கேள்வி கோரப்பட்டு அரசாங்கத்திற்கு அதி கூடிய நலன்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமல் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 05 மில்லியனைவிட குறைவான 741 செயற்திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்பட்டு வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக் கிடையே ஒரு ஒப்பந்தகாரருக்கு அந்த செயற்திட்டங்களில் 80 சதவீதத்தை விட கூடிய அளவில் வழங்கப்பட்டிருந்தன. அவ்வாறே 741 செயற்திட்டங்களும் பகிர்ந்தளிக்கப்பட்ட காரணத்தினால் ரூபா 3.58 மில்லியன் தொகை கேள்விச் சபை படிகளாகச் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தன.

## 2.9 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சிற்குச் சொந்தமாக 04 வாகனங்கள் போதிளவாகக் காணப்பட்ட போதிலும் வாடகை அடிப்படையில் வாகனமொன்று பெறப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 470,180 தொகை வாகன வாடகையாகச் செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தினால் கடபனஹ விற்பனைத் தொகுதியை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் ஆலோசனைச் சேவை வட மத்திய மாகாண பொறியியளாலர் திணைக்களத்திற்கு வழங்கப்படாமல் 2011 ஆம் ஆண்டின் போது அந்தச் சேவை தனியார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்டு ரூபா 313,800 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஆண்டின் மூலப்பொருள் தேவைகள் தொடர்பாக எவ்வித எதிர்வு கூறலுமின்றி மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் கைப்பணி நிலையங்களிலும் தச்சுத் தொழில் நிலையங்களிலும் 2011 ஆம் ஆண்டின் ஆரம்ப மூலப்பொருளின் இருப்பு முறையே ரூபா 8,109,272 தொகை மற்றும் ரூபா 7,201,762 தொகைகளாக இருந்த

போதும் ஆண்டின் போது முறையே ரூபா 13,004,774 மற்றும் ரூபா 11,550,844 தொகையான மூலப் பொருடகள் கொள்வனவு செய்யப்பட்ட காரணத்தினால் ஆண்டின் இறுதியின் போது கைப்பணி நிலையங்களின் மூலப் பொருட்களின் இருப்பு ரூபா 17,638,040 ஆகவும் தச்சுத் தொழில் நிலையங்களில் மூலப்பொருள் இருப்பு ரூபா 9,460,810 ஆகவும் எஞ்சியிருந்தன.

## 2.10 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2004 ஆகஸ்ட் 31 ஆந் திகதிய 353(5) ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்று நிரூபத்தில் வாகன வழங்கல்களுக்காக முறையான திட்டமொன்று தயாரிக்கப்படும் வரையிலும் 06 மாத காலத்திற்காக மாத்திரம் வாடகை அடிப்படையில் வாடகை வாகனங்களைப் பெற்றுக்கொள்வதற்கு திறைசேரி அங்கீகாரம் வழங்கியிருந்ததுடன் 2010 திசெம்பர் 07 ஆம் திகதிய 150 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்று நிரூபத்தில் 60 மாத கால எல்லைக்காக நிதிக் குத்தகை முறைமையில் வாகனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அந்த சுற்றுநிருபத்திற்கு முரணாக 2005 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டு வரையான 07 வருட காலத்தின் போது கூட்டுறவு அமைச்சினால் வாடகை அடிப்படையில் 02 வாகனங்கள் பெறப்பட்டு அதற்காக ரூபா 4,048,835 கூட்டுத்தொகையான வாகன வாடகை செலுத்தப்பட்டிருந்தன.

(ஆ) கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் நோக்கம் மற்றும் செயற்பாடுகளுக்கு புறம்பான செயற்திட்டங்களை அமுற்படுத்துவதற்காக 06 சந்தர்ப்பங்களின் போது ரூபா 7,785,035 தொகை செலுத்தப்பட்டிருந்தன.

(இ) வீடுகளைத் திருத்தியமைப்பதற்காக 56 வீட்டு நலனாளிகளுக்கு 2010 ஆம் ஆண்டின் போது கூட்டுறவு கிராமிய வங்கியினால் செலுத்தப்பட்ட ரூபா 4,200,000 தொகையான வீடமைப்புக் கடன் மீதியிலிருந்து அறவிட வேண்டிய நிலுவைக் கடன் தவணைப் பணத்தின் பெறுமதி ரூபா 241,371 ஆக இருந்தது.

(ஈ) தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு என்பவற்றின் நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் வடமத்திய மாகாண பிரதம அமைச்சினால் 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் சாத்தியவள ஆய்வு இன்றி கொள்வனவு வழிகாட்டிகளைக் கருத்திற்கொள்ளாது பிழையான மதிப்பீடு மற்றும் முறையற்ற உடன்படிக்கை அமுல்படுத்தப்பட்டிருந்த பயங்கரவாத நடவடிக்கைகளின் காரணமாக பாதிப்பிற்கு உள்ளாகியிருந்த குளங்களை நவீனமயப்படுத்தும் செயற்திட்டங்களை அமுல்படுத்தல், கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை போன்ற குறைபாடுகளின் அடிப்படையில் வெற்றியடைந்திருக்கவில்லை. அந்த செயற்திட்டங்களிலிருந்து ரூபா 78.7 மில்லியன் நட்டமொன்று அரசாங்கத்திற்கு ஏற்பட்டிருந்ததுடன் எவ்வித அதிகாரமும் இன்றி செலுத்தப்பட்ட ரூபா 31.2 மில்லியன் தொகையான வேலை ஆரம்பிப்பு முற்பணமானது 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.11 சர்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2010 மே 01 ஆந் திகதி தொடக்கம் 2011 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக மாகாண சபை மற்றும் சபைச் செயலகத்திற்காக பாதுகாப்பு சேவை வழங்குனரைத் தெரிவு செய்யும் போது சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையின் நியமங்களுக்கு இணங்காதிருந்தமை சுட்டிக்காட்டப்பட்டு கொள்வனவுக் குழுவினால் ஆகக் குறைந்த கூறு விலை சமர்ப்பித்த நிறுவனம் நிராகரிக்கப்பட்டிருந்தது. ஆகக்கூடிய கூறு விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்த போதும் அந்த நிறுவனம் 2011 மே 01 ஆம் திகதி தொடக்கம் 2012 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்காக மேற்பார்வை பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கூறு விலைகள் சம்பளக் கட்டுப்பாட்டுச் சபையின் நியமங்களிற்கு இணங்கியிருக்கவில்லை. கொள்வனவுக் குழு தெளிவாகவும் நேர்மையாகவும் செயற்படாது கூடிய கூறு விலை சமர்ப்பித்த நிறுவனங்களிற்கு பாதுகாப்பு சேவை வழங்கும் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டு அக்காலப்பகுதிக்காக ரூபா 1,318,032 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பொலன்நறுவை கல்வி வலயத்தின் பாடசாலைகளில் வெற்றிடமாகக் காணப்பட்ட 26 அதிபர் பதவிகளுக்காக அந்த பாடசாலைகளில் சேவையாற்றிய ஆசிரியர்களின் சிரேஷ்ட தன்மையினைக் கருத்திற்கொள்ளாது அதிபர் மற்றும் பிரதி அதிபர் பதவிகளில் பதில் கடமைக்காக கனிஷ்ட ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

## 2.12 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவைகளுக்கான பங்களிப்புப் பணம் செலுத்துவதிலுள்ள தாமதத்தினால் அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மைக்கு எதிராக அந்த நிதியங்களினால் விதிக்கப்பட்ட ரூபா 1,104,803 தொகையான மிகைக் கட்டணம் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த போதிலும் பங்களிப்புப் பணம் உரிய காலப்பகுதியில் செலுத்துவதிலுள்ள தாமதத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து அப்பணத்தை அறவீடு செய்வதற்கும் அவர்களுக்கு எதிராக சட்டரீதியாக நடவடிக்கைகளை எடுப்பதற்கும் முகவராண்மையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது முன்பள்ளிச் சிறுவர் அபிவருத்தி அதிகார சபையினால் ரூபா 3,993,541 தொகையான முன்பள்ளி உபகரணங்களின் கொள்வனவு 06 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்டமையினால் அந்த உபகரணங்களை ஒரே தடவையில் கொள்வனவு செய்வதனால் பெறக்கூடியதாக இருந்த பொருளாதார நலன்களையும் கொள்வனவு மற்றும் 05 தொழில் நுட்ப குழுவின் அங்கத்தவர்களுக்கு மேலதிகமாகச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளைத் தவிர்த்துக் கொள்வதற்கிருந்த பொருளாதார நலன்களையும் நிறுவனம் இழந்திருந்தது.

(இ) வடமத்திய மாகாணத்தில் மின்சாரமற்ற கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்குவதற்காக விறகு எரிபொருள் மின்சார உற்பத்தி செயற்திட்டத்திற்காக 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 2,396,800 தொகையும், 2011 ஆம் ஆண்டின் போது ரூபா ரூபா 2,198,536 தொகையுமாக ரூபா 4,595,336 தொகை வடமத்திய மாகாண பிரதம

செயலாளரினால் செலவிடப்பட்டிருந்த போதிலும் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாமையாலும் குறைபாடான திட்டமிடல்கள் போன்ற காரணங்களினாலும் செயற்திட்டம் முழுமையாக வெற்றியடைந்திருக்க வில்லை.

(ஈ) பிரதம அமைச்சினால் 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ரூபா 292,659,480 தொகையில் கொள்வனவு செய்யப்பட்ட 20,000 சூரிய பந்தங்கள் செயற்பாட்டுத் தன்மை மற்றும் உற்பத்தியின் குறைபாடுகள், வழங்குனர்கள் இணங்கிய சேவைகளை நலனாளிக்கு வழங்காமையாலும் மேற்பார்வையிலுள்ள குறைபாடுகளினாலும் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் பின்வரும் அவதானிப்புக்களும் மேற்கொள்ளப்பட்டன.

(i) சூரிய பந்தங்கள் பெறுமதி சேர் வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 5000 சூரிய பந்தங்களிற்காக வழங்குனருக்கு ரூபா 5,213,000 தொகையும், 2009 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட 4500 பந்தங்களிற்காக வழங்குனருக்கும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கும் ரூபா 8,216,214 தொகையுமாக ரூபா 13,429,614 தொகையான பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்தன. அந்த வரித் தொகையை மீள அறவிடுவதற்கு 2013 சனவரி 23 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது ரூபா 30,000,000 தொகையான நிதி ஏற்பாடு எல்லைக்குள் சூரிய பந்தங்களைக் கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் அதன் எல்லை ரூபா 47,618,000 இனால் அதிகரித்து ரூபா 77,618,000 தொகை செலுத்தப்பட்டு 5000 சூரிய பந்தங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(உ) வட மத்திய பிரதம அமைச்சினால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது மாகாண அபிவிருத்தி மற்றும் மாகாண குறித்த அபிவிருத்தி மானியங்கள் என்பவற்றைப் பயன்படுத்தி தெரிவு செய்யப்பட்ட நலனாளிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 7500 நீர் வடிகள் ரூபா 80,640,000 தொகை செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

அது தொடர்பாக 2011 நவம்பர் மாதத்தில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

i. கொள்வனவுகள் அரசாங்க பெறுவனவு வழிகாட்டிக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டிருந்தன.

ii. 3268 நீர் வடிகள் நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் நீர் வடிகளில் கறள் படிந்திருந்தமை, நீர் பரல்களின் பகிர்ந்தளித்தல், செயற்பாட்டிலான குறைபாடுகள், வழங்குனரினால் இணங்கப்பட்ட சேவைகளை நிறைவேற்றாமை போன்ற காரணங்களினால் நலனாளிகளினால் அவைகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.

(ஊ) மாகாண விவசாயத் திணைக்களத்தினால் 2011 ஆம் ஆண்டின் போது அமுல்படுத்தப்பட்ட சேதனப் பசளை உற்பத்தி மற்றும் பயன்பாட்டை ஊக்குவிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்ட 400 பாடசாலைகளில் இணைந்த கூட்டுப்பசளை உற்பத்திகளை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம் குறித்த வகையில் திட்டமிடப்படாமையினால் ரூபா 180,000 தொகையை வழங்குவதற்கு முடியாமலிருந்தமையால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,014,850 பெறுமதியான பொருட்களைப் பகிர்ந்தளித்தல் 2012 யூலை மாதம் வரையிலும் தாமதமடைந்திருந்தது. அதனால் செயற்திட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது.

(எ) வட மத்திய மாகாண சபை அதிகாரப் பிரதேசத்தில் விவசாயிகளுக்குத் தேவையான விவசாயப் பொருட்களை சலுகை விலைகளில் வழங்கும் நோக்கத்துடன் மாகாண விவசாயத் திணைக்களத்தின் விவசாய அபிவிருத்தி முற்பணக் கணக்கின் செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,000,000 தொகையான ஆகக் கூடிய செலவின எல்லை விதிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அந்த எல்லையில் 02 சதவீதமான ரூபா 101,488 தொகை மாத்திரமே செலவிடப்பட்டிருந்தன. அதனால் முற்பணச் செயற்பாடுகளுக்குரிய ஆகக் குறைந்த பெறுவனவு எல்லை ரூபா 2,622,878 இனால் அடையப்பட்டிருக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து தொடர்ந்து கணக்குகளில் காண்பிக்கப்பட்ட

ரூபா 16,295 தொகையான வழியில் நின்ற காசு மீதி மீளாய்வாண்டின் போதும் இனங்காணப்பட்டு தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2010 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் 06 மீண்டெழும் செலவின விடயங்களில் 44 சதவீதத்திற்கும் 103 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் அதிகரித்திருந்தன.

(ஐ) மஹவிலச்சிய பிரதேச செயலகத்தின் வரைபடம் மற்றும் முழுமையான காணி விபரப்பட்டியல்களின் பிரகாரம் மஹவிலச்சிய கிராமிய வைத்தியசாலைக்குரிய 13 ஏக்கர், 02 றூட், 30 பேர்ச்ஸ் அளவினையுடைய காணியில் மேற்கொள்ளப்பட்டிருந்த அனுமதியற்ற நிர்மாணங்கள் மற்றும் உபயோகித்தல் தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) அபிவிருத்தி வடிவமைப்பு மற்றும் இயந்திர உபகரண முகவராண்மையினால் 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 12,537,565 தொகையான பெறுமதி சேர் வரி உரிய காலப் பகுதியில் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஓ) மாகாண பொறியியலாளர் திணைக்களத்தில் நிலைமைக் கட்டுப்பாடு பிரிவினால் நிலைமைக் கட்டுப்பாட்டு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்த போதிலும் மாகாண நீர்பாசனத் திணைக்களத்தினால் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 1,338,376 தொகையான நிலைமைக் கட்டுப்பாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அவைகள் பொறியியலாளர் திணைக்களத்தின் நிலைமைக் கட்டுப்பாட்டு பிரிவிற்கே கையளிக்கப்பட்டிருந்தன. 2011 ஆம் ஆண்டின் போதும் கொள்வனவு நடைமுறைக்குப் புறம்பாக ரூபா 2,587,340 தொகையான நிலைமைக் கட்டுப்பாட்டு உபகரணங்கள் மீளவும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஔ) திம்புலாகல கல்வி வலயத்தில் 520 உத்தியோகபூர்வ பாடசாலை விடுதிகளில் தற்போது ஆசிரியர்கள் குடியிருக்கின்ற 70 விடுதிகளுக்காக 1996 ஆம் ஆண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட ரூபா 75 படியான சிக்கன வாடகை 2011 ஆம் ஆண்டின் போதும் அறவிடப்பட்டிருந்தன.

நீண்ட காலமாக முழுமையாக திருத்தியமைக்கப்பட வேண்டிய நிலைமையில் காணப்பட்ட 466 விடுதிகளுக்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் நிதி ஏற்பாடு வழங்கப்படாமையின் காரணமாக 450 பாடசாலை விடுதிகள் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(க) ஹிங்குரக் கொடை கல்வி வலயத்திலுள்ள பாடசாலைக்குரிய பள்ளக் காணி மற்றும் வயல் காணி அனுமதியற்ற செயற்பாடுகளுக்குள்ளாகியிருந்த போதிலும் அக் காணிகளின் உரித்துறுதி அல்லது உரிமைச் சான்றிதழைப் பெற்று அவற்றின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கா) ஹிங்குரக்கொடை கல்வி வலயத்தில் 256 உத்தியோகபூர்வ பாடசாலை விடுதிகளில் 170 விடுதிகளுக்காக ரூபா 500 இனை விடக் குறைவான சிக்கன வாடகை அறவிடப்பட்டுக் கொண்டிருந்ததுடன் அந்த விடுதிகள் நீண்ட காலமாக திருத்தப்படாமை அதற்கான காரணமாக இருந்த போதிலும் விடுதிகளைத் திருத்தியமைப்பதற்காக போதியளவான நிதி ஏற்பாடு பல வருட காலமாக மாகாணக் கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(கி) விவசாய அமைச்சின் உள்நாட்டு மரக்கறி பயிர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கு வழங்குவதற்காக ரூபா 1,225,000 தொகை செலவிடப்பட்டு 2500 பூ வாளிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அதற்கான ரூபா 1,000,000 தொகையான நிதி ஏற்பாடுகளில் ஏனைய செலவினங்களைச் செய்ததன் பின்னர் எஞ்சியிருந்த ரூபா 778,701 தொகையான நிதி ஏற்பாடு போதியளவாக இன்மையினால் விவசாய அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான நிதி ஏற்பாடுகளில் 31 சதவீதம் பெறப்பட்டிருந்தது.

## 2.13 செயலாற்றல்

---------------------

மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் குறிக்கோள்கள் மற்றும் பிரதான செயற்பாடுகளின் கீழ் கொண்டுவரப்படாத கல்விப் பெறுபேறுகளை உயர்வடையச் செய்வதற்காக 2011 இல் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைக்குத் தோற்றுவதற்கிருந்த மாணவர்களிற்காக நடாத்தப்பட்ட மாநாட்டிற்காக சமூக சேவைத் திணைக்களத்தின் மூலதன செலவின விடயத்திலிருந்து

மீளாய்வாண்டில் 09 சந்தர்ப்பங்களின் போது ரூபா 715,469 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன.

### 2.13.1 அரசாங்க மானியம்

மாகாண சபை அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக கிடைத்த நிதிஏற்பாடு மற்றும் செலவினங்கள் தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | மூலம் | கிடைத்த அரசாங்க மானியம் | பயன்பாடு | (மிகை)/குறை வான பயன்பாடு |
|---|---|---|---|---|
| | | ரூபா. ஆயிரங்களில் | ரூபா ஆயிரங்களில் | ரூபா. ஆயிரங்களில் |
| (அ) | வகைப்படுத்தப்பட்ட மானியம் | 1,577,000 | 1,313,786 | 263,214 |
| (ஆ) | மாகாண குறித்த அபிவிருத்தி மானியம் | 1,078,750 | 1,103,635 | (24,885) |
| (இ) | ஒன்றிணைந்த மானியம் | 7,595,670 | 8,221,279 | (625,609) |
| (ஈ) | ஏனைய மானியம் | 62,003 | 64,513 | (2,510) |
| | மொத்தம் | 10,313,423 | 10,703,213 | (389,790) |

### 2.13.2 மாகாண அபிவிருத்தித் திட்டம்

மீளாய்வாண்டிற்கான மாகாண அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புதிய வேலைகள் மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் ரூபா 1,960,963,763 பெறுமதியான 1573 வேலைத்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்கள் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்படுகின்றன.

| | புதியவேலை | தொடர்ச்சியான வேலை | மொத்த வேலைத் திட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்ட | 898 | 245 | 1143 |
| 75% - 90% இடையில் பூர்த்தி செய்யப்பட்ட | 52 | 24 | 76 |
| 50% - 75% இடையில் பூர்த்தி செய்யப்பட்ட | 34 | 06 | 40 |
| 50% இனை விடக் குறைவாக பூர்த்தி செய்யப்பட்ட | 40 | 12 | 52 |
| ஆரம்பிக்கப்படாதவை | 262 | - | 262 |
| மொத்தம் | 1286 | 287 | 1573 |

### 2.13.3 போதியளவில் நிறைவேற்றப்படாத குறிக்கோள்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ஹிங்குக் கொடை கல்வி வலயத்தில் கடந்த 05 வருட காலத்தில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய சகல மாணவர்களும் சித்தியடையாத பாடசாலைகள் 24 ஆக இருந்ததுடன், க.பொ.த சாதாரண தரம் பரீட்சையில் சித்தியடைதல் வீதம் 38 சதவீதமாக இருந்தது. க.பொ.த (உ.தரம்) கலைப்பிரிவில் 18 பாடசாலைகளிலும், வணிகப் பிரிவில் 14 பாடசாலைகளிலும், விஞ்ஞான பிரிவில் 06 பாடசாலைகளிலும் கற்பித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சித்தியடைதல் வீதம் கலைப் பிரிவில் 60 சதவீதம், வணிகப் பிரிவில் 46 சதவீதம், விஞ்ஞானப் பிரிவில் 26 சதவீதம் ஆகவும் இருந்தன.

(ஆ) இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினாலும் வட மத்திய மாகாண அரச சேவைக் ஆணைக்குழுவினாலும் நேரடியாக மீளாய்வாண்டில் நடாத்தப்பட வேண்டியிருந்த 16 பரீட்சைகள் 2011 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடாத்தப்பட்டிராததுடன் வட மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழுவில் பரீட்சைப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்படாமல்

மீளாய்வாண்டில் 08 பரீட்சைகள் நடாத்தப்பட்டிருந்தன. இதனால் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் போது இரகசியத் தன்மையைப் பாதுகாப்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.14 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடு**

2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு தீர்மானிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 6,527,759 தொகையான 05 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் அத்திகதியில் உள்ளவாறு அடையப்பட்ட முன்னேற்றம் 20 சதவீதத்திற்கும் 50 சதவீதத்திற்கும் இடையிலாக இருந்தது.

**2.15 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மாகாண சபையினால் சேகரிக்கப்படுகின்ற வருமானம் மற்றும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கின்ற மூலதன மானியம் என்பவற்றை ஆகக் கூடிய செயற்திறனாகவும் வினைத்திறனாகவும் மற்றும் தாமதமின்றியும் சிக்கனமானதாகவும் உள்ளவகையில் மாகாணத்தின் அபிவிருத்திச் செயற்பாட்டிற்காக ஈடுபடுத்துதல் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத் தரப்பினரின் பொறுப்பாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது மாகாண சபைக்குக் கிடைத்த ரூபா 2,717,753,130 தொகையான மூலதன மானியங்களிலிருந்தும் கடந்த பல வருடங்களாகக் கிடைத்த மானியங்களிலிருந்தும் உரிய அபிவிருத்திச் செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படாமையினால் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 820,738,488 தொகை மாகாண சபையினால் பல்வேறு அரசாங்க வங்கிகளில் நிலையான வைப்புக் கணக்குகளில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தன. அந்தத் தொகை மீளாய்வாண்டில் கிடைத்த மூலதன மானியங்களில் 30 சதவீதமாக இருந்ததுடன் மாகாண சபை நிதியம் குறைவான பயன்பாட்டிற்கு உள்ளாகியிருந்தமை நிதிக் கட்டுப்பாட்டுக் குறைபாடாக வெளிப்படுத்தப்படுகின்றது.

(ஆ) தரம் வாய்ந்த உள்ளீடுகளைக் கொள்வனவு செய்வதற்கும் உயர்தரமான கல்விச் செயற்பாடுகளுக்காகவும் ஹிங்குரக் கொடை கல்வி வலயத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் ரூபா 5,937,355 உரிய நோக்கங்களுக்காக செலவிடப்படாமல் பாடசாலை வங்கிக் கணக்குகளில் செயற்பாடற்றுக் காணப்பட்டன.

(இ) பிரதம செயலகத்தின் 609 ஆம் தலைப்பில் 02 செலவின விடயங்களில் ரூபா 5,762,000 தொகையான நிதிஏற்பாடு சுகாதார அமைச்சின் பொலன்னறுவை உப அலுவலகத்தின் பூங்காவை அலங்கரிப்பதற்காகவும் காற்றுச்சீராக்கங்களுக்காகவும் சமயலறைப் பொருட்கள் மற்றும் அலுவலக உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் விடுவிக்கப்பட்டிருந்தன. சுகாதார அமைச்சின் மேற்கூறப்பட்ட செயற்பாட்டிற்காக 2011 ஆம் ஆண்டில் நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையினால் இந்த நிதி ஏற்பாடுகள் விடுவிக்கப்பட்டிருந்ததாக காண்பிக்கப்பட்டிருந்த போதும் செலவினத் தலைப்பு 606 இற்குரிய குறை நிரப்பு மதிப்பீட்டை அங்கீகரித்து அந்த செயற்பாடுகளை நிறைவேற்றக் கூடியதாக இருந்தது. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படாமல் செலவினத் தலைப்பு 606 இன் செயற்பாட்டிற்காக பிரதம செயலகத்தின் நிதி ஏற்பாட்டை ஈடுபடுத்தியதில் அந்த நிதி ஏற்பாடு குறைவான பயன்பாட்டையும், சுகாதார அமைச்சின் நிதி ஏற்பாட்டில் மிகையான பயன்பாட்டையும் ஏற்படுத்தியிருந்தன. எவ்வித எதிர்வு கூறலுமின்றி தலைப்பு 609 இல் மிகையான நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை மற்றும் தலைப்பு 606 இல் போதியளவான நிதிஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிராமை என்பன கணக்குகளில் தென்படுவதைத் தவிர்ப்பதற்காகவே பிரதம செயலகத்தின் மேலதிக நிதிஏற்பாட்டை ஏனைய நோக்கங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததா என்பதை கணக்காய்வின் போது புறந்தள்ள முடியாதிருந்தது.

(ஈ) 610 – 8 – 2 – 2501/23 – ஏனைய செலவின விடயத்திற்காக ரூபா 1,615,000,000 தொகையான குறைநிரப்பு நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் மொத்தச் செலவினம் ரூபா 815,718,684 தொகையாக இருந்ததுடன் அந்தச் செலவினம் முழுவதும் வெள்ளத்தினால் பாதிப்பிற்குள்ளாகிய மாகாண வீதிப் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் செலவிடப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் குறைநிரப்பு மதிப்பீடு தலைப்பு 608 இன் கீழ் ஒதுக்கீடு செய்ய வேண்டியிருந்தமையும், மாகாணத் திறைசேரி எவ்வித எதிர்வு கூறலுமின்றி குறைநிரப்பு மதிப்பீட்டை அங்கீகரித்திருந்தமையும், தமது நோக்கங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டன.

## 3. கணக்களிப்பும் நல் ஆளுகையும்

### 3.1 கூட்டிணைந்த திட்டம்

நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க சுற்றுநிருப கடிதத்தின் பிரகாரம் மாகாண சபை, அதன் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அவைகளின் நோக்கம் மற்றும் செயற்பொறுப்பாளர்களுக்குரிய கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.

### 3.2 செயல் நடவடிக்கைத்திட்டம்

மாகாண சபை, அதன் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 உள்ளகக் கணக்காய்வு

வடமத்திய மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு மற்றும் புலனாய்வுத் திணைக்களத்தின் பிரதான நோக்கம் மற்றும் செயற்பாடான மாகாண சபையின் நிறுவனங்களில் பிழைகள் மற்றும் மோசடிகளைத் தடுத்தல் மற்றும் சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்டிருந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகளின் தரத்தை பரிசோதித்தல், அவற்றின் குறைபாடுகளைத் திருத்துவதற்கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவர்களினால் விநியோகிக்கப்பட்ட கணக்காய்வு ஐய வினாவின் பிரகாரம் அவதானிக்கப்பட்டிராததுடன் திணைக்களத்தில் நீண்ட காலமாகக் காணப்பட்ட பதவியணியினர்களின் 5 வெற்றிடங்களை நிரப்பாதிருந்தமை அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் போதியளவான செயலாற்றல்களைப் பேணுவதற்கும் இடையூறாக இருந்தன.

### 3.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுச் சுற்றுநிருபத்தின் 06 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவில் உள்ளவர்கள் ஒவ்வொரு காலாண்டிற்கு ஒரு தடவையாவது கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது சகல அமைச்சுக்கள் / திணைக்களங்களினால் ஒரு தடவை மாத்திரமே கூட்டம் நடாத்தப்பட்டிருந்தது.

### 3.5 கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் 2011 ஆம் ஆண்டிற்கான கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) ஒப்பந்த நிருவாகம்
(ஈ) நிலையான சொத்துக்கள்
(உ) நிதியங்களின் பயன்பாடு
(ஊ) மனிதவள முகாமைத்துவம்
(எ) செயற்திட்டங்களைத் திட்டமிடலும் அமுலாக்கலும்
(ஏ) கொள்வனவுச் செயற்பாடுகள்
(ஐ) களஞ்சியக் கட்டுப்பாடு
(ஒ) வரவும் மேலதிக நேரக் கட்டுப்பாடும்